**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 86/2016**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.03.2026 | | |
| பெயர்: | உமாமகேஷ்வரி (PW– 1 Cross ) | கணவர் பெயர்: | கணேசமூர்த்தி |
| கிராமம்: | நிம்மேலி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 59/2026 |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 04.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 11.56)**

1. எந்தெந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 246 ஆகும், உட்பிரிவு எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் 1ம் பிரதிவாதி அறிவழகன் குடியிருந்து வருகிறார். அக்ரஹாரத்தெரு எங்களது வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் உள்ளது. தாவா சொத்தை நான் வாங்கும்போது, வீடாக தான் வாங்கினேன், வீட்டினை நான் கட்டவில்லை. அவ்வாறு வாங்கப்பட்டது 2004ம் வருடம் ஆகும். அந்த ஆவணம் வா.சா.ஆ.3 என்றால் சரிதான்.

2. நான் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பிலிருந்து தாவா சொத்தின் வடபுறத்தில் 1997லிலிருந்து 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் மேற்படி வீட்டை வாங்கும்போது, கட்டிய வீடாக தான் வாங்கப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விபரத்தில் 770 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். ஆனால் மேற்படி வீட்டின் நீள, அகலம் வா.சா.ஆ.3ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்ட வீடு என்னுடையது தான். அதற்கு வடக்கு பக்கத்தில் உள்ள ஓட்டு வீடு 1ம் பிரதிவாதி வீடு என்றால் சரிதான். மேற்கண்ட **புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.1** மற்றும் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. வா.சா.ஆ.8 ஆவணம் என்பது 1ம் பிரதிவாதி சொத்திற்கான கிரய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் பிரதிவாதியின் தென் சுவர் மற்றும் வட சுவர் அவருக்கு சொந்தமானது என்றும், மேற்படி வீட்டின் அகலம் கீழ்–மேல் 77 அடியும், தென்–வடல் 30 அடியும் என ஆக கூடுதல் 2310 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முற்றம் நீங்கலாக 2140 சதுரடியில் வீடு உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.8 படி தென்புறம், வடபுறம் உள்ள தாய்சுவர்கள் அவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. எனது இடத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளதால், அந்த இடத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு, ஆதரவாக வடபுறம் உள்ள சுவற்றின் உயரம், அகலம் இவற்றை உறுதிபடுத்த நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.3ன் படி வடபுறம் சுவர் எனக்கு சொந்தமானது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வடபுற சுவர் எனக்கு சொந்தமாக இருந்திருந்தால் பத்திரத்தில் சுவற்றின் நீள, அகலம் காட்டப்பட்டிருக்கும், ஆனால் அவ்வாறு இல்லாததால்தான் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வடபுறம் உள்ள சுவர் எனக்கு சொந்தமானது என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.3ன் படி சர்வே எண்.246/4Bல் 7 சென்ட் என்றும், நத்தம் சர்வே எண்.246/1 (புதிய புல எண் 359/15) 17 சென்ட் எனவும், மொத்தம் 24 சென்ட்டிற்கு வா.சா.ஆ.3 ன் படி உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். தாவாசொத்து ஆதியில் கணேச அய்யருக்கு சொந்தமானது

என்பதற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.1 ஆவணத்திலும் புல எண்.246/1 சொத்தை பொறுத்து, அதில் உள்ள ஓட்டுவீட்டின் நீள–அகலம் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் தாவா சொத்தின் வடபுறம் உள்ள தாய்சுவர் கணேச அய்யருக்கு சொந்தமானது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கணேச அய்யர் வா.சா.ஆ.1ன் அடிப்படையில் கடந்த 21.05.1975ல் வா.சா.ஆ.2 ஆவணமான உயிலினை அவரது மகள் சிவகாமசுந்தரிக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண்.246/1ல் மொத்தம் 16 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். புல எண்.246/4Bல் 7 சென்ட் ஆக கூடுதல் 23 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். ஆனால் நான் தாவாசொத்தை கிரயம் செய்த வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி புல எண்.246/1ல் மொத்தம் 17 சென்ட் எனவும், புல எண்.246/4Bல் 7 சென்ட் ஆக கூடுதல் 24 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 க்கிடையில் 1 சென்ட் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். அது எவ்வாறு வந்தது என்றால் ஏற்கனவே இருக்கும் ஆவணத்தின் அடிப்படையில் தான் வந்தது. வா.சா.ஆ.3ன் படி தாவா சொத்தை நான், கணேச அய்யரின் மருமகனும், சிவகாம சுந்தரியின் கணவருமான ஆத்மநாத அய்யரிடம் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் 2வது நபராக மேற்படி ஆத்மநாத அய்யரின் மகன் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தை ஆத்மநாத அய்யர் மட்டுமே விற்பனை செய்துள்ளார். அவரது மகன் கிருஷ்ணமூர்த்தி கூட்டாக விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். ஆத்மநாத அய்யருக்கே தாவா சொத்தை பொறுத்து முழு உரிமை கிடையாது என்பதாலும் அவரது மகளுடன் சேர்ந்து விற்பனை செய்யாததாலும்

வா.சா.ஆ.3 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால்  சரியல்ல.

12. வா.சா.ஆ.8 ஆவணம் செல்லாது என நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது ஆவணமான வா.சா.ஆ.3 செல்லாதபோது, வா.சா.ஆ.8 ஆவணம் செல்லத்தக்கதல்ல என நான் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் B அட்டவணை சொத்தை எப்போது ஆக்கிரமித்தார்கள் என்றால் 2015ம் வருடத்திலிருந்து ஆக்கிரமித்துள்ளார்.

13. தாவா B அட்டவணை சொத்தை எந்த முறையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என நான் கூறவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வீடு, 2ம் பிரதிவாதியின் மூதாதையர் காலத்திலிருந்து  1903ம் வருடத்திலிருந்து பிரதிவாதி சொத்தில் வீடு உள்ளது என காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் 1903ம் வருடத்திலிருந்து சுவர் உள்ளதால் 2015ம் வருடம் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல.

14.  என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வெள்ளை கலர் உள்ள வீடு பிரதிவாதியின் வீடு என்றால் சரிதான். அதன் உயரம் சுமார் 18 அடி இருக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் உள்ள 1ம் பிரதிவாதியின் தாய் சுவர் கிழக்கு மேற்காக செல்கிறது என்றால் சரிதான். எனது வீடு மொத்தமாக 20 அடியுடன் முடிந்து விடுகிறது என்றும், அதன்பிறகு மேற்கு பக்கத்தில் 1ம் பிரதிவாதியின் வீட்டுச்சுவர் செல்கிறது என்றால் சரிதான். அதனால்தான் வா.சா.ஆ.8 ஆவணத்தில் கிழ–மேல் 77 அடி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. 1ம் பிரதிவாதி சொத்தின் வடபுறம் மற்றும் தென்புறம் உள்ள சுவர் வா.சா.ஆ.8 ஆவணத்தினால் 1ம் பிரதிவாதிக்கு சொந்தம் என காட்டுகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் எவ்வித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

16. நீ.ம.சா.ஆ.4 வரைபடத்தில் கிழக்கு–மேற்கில் ஆக்கிரமிப்பு உள்ளது என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்தில்தான் 1ம் பிரதிவாதி அவர் வீட்டு சுவரை வைத்து ஆக்கிரமித்துள்ளார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நில அளவையர் அவரது அறிக்கையில், எனது வீட்டின் நீள–அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

17. சர்வேயர் அவரது அறிக்கையில், 248 சதுரடி 1ம் பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அந்த 248 சதுரடியில் என்ன உள்ளது என்பது பற்றி குறிப்பிடவில்லை. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில், ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி சுவர் மற்றும் மழைநீர் வடிகால் வாரியும் அமைக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார், ஆனால் நீள–அகலம், உயரம் கூறவில்லை என்றால் சரிதான்.

18. வா.சா.ஆ.3ன் படி எனக்கு 16 சென்ட் தான் உரிமையானது என்றாலும், அதனை வா.சா.ஆ.2 ஆவணம் உறுதிபடுத்துகிறது என்றாலும், வா.சா.ஆ.3க்கும் வா.சா.ஆ.2க்கும் இடையிலான வித்தியாசம் 435 சதுரடி உள்ளது என்பதால் சர்வேயர் கூறிய 248 சதுரடி என்பது ஆக்கிரமிப்பாக எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனக்கு உரிமை மூலம் இல்லாத ஒரு சென்ட்டை பொறுத்து, நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் வழியாக நான் எவ்வித அனுகூலமும் பெற முடியாது என்றால் சரியல்ல.

19. 1ம் பிரதிவாதியின் வடபுற தாய் சுவர் 1903ம் வருடத்திலிருந்து இருந்துவருவதால்தான் B அட்டவணை சொத்தில் என்ன உள்ளது என்பதை நான் கூறவில்லை என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் அக்ரஹாரத்தெரு, தாவா சொத்திற்கு தெற்கில் உள்ளது என காட்டப்பட்டுள்ளதென்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தில் தெரு வடக்கு–தெற்காக செல்கிறது என்றால் சரிதான். எனது வீடு கிழக்கு பார்த்த வாசற்படி என்றால் சரிதான்.

20. நீதிமன்ற ஆணையர் எனக்கு ஆதரவாக அவரது அறிக்கையில் திசையை தவறாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எவ்வித உரிமை மூலமும் இல்லாத காரணத்தால் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனது கட்சியை உறுதிபடுத்துவதற்கு இல்லை என்றால் சரியல்ல.

21. தாவா B அட்டவணை சொத்தை 1ம் பிரதிவாதி 2015ல் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வடபுற தாய்சுவற்றை உறுதிபடுத்தும் விதமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 12.55)**